தனவைசிய ஊழியன்

மலர் 4, இதழ் 32

April 29, 1924

Record no. 148

Taṉavaiciya ūḻiyaṉ

Malar 4, itaḻ 32

April 29, 1924

Record no. 148

உ

சிவமயம்.

சென்னைப் பதிவுஎண் கரு௦கூ. | தந்தி விலாசம்:—"Ooliaa'

தனவைசிய ஊழியன்

தனவைசிய ஊழியர் சங்கத்தினின்று
செவ்வாய்க்கிழமை தோறும் வெளி வருவது.

ஆசிரியன் :—ராய. சொக்கலிங்கன்.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்—திருக்குறள்.

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்—திருக்குறள்.

மலர் ச. காரைக்குடி ரக்தாக்ஷிஸு சித்திரை-மீ கஎ-உ (உகூ—ச—கதூஉச) இதழ் ருஉ

ஸ்ரீசங்கராச்சார்யசுவாமிகள்

இதோ படத்திற் காணப்பெறும் அழகிய உருவம் ஒரு பெரிய ஆச்சாரிய ஸ்வாமிகளுடைய உருவம். தற்போதுஸ்ரீகாஞ்சி சிருங்ககிரி துவாரகை ஜகந்நாதம் பதரீகேதாரம் முதலிய உயர்ந்த க்ஷேத்திரங்களில் ஸ்தாபிக்கப்பெற்று நடந்துவரும் சங்கராச் சாரியார் நிலயங்கட்கு ஆதிகர்த்தராகிய ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய ஸ்வாமிகள் இவர்களேயாவர்.

இப்படத்தில் இன்னும்—இப்பெரியாருடன் கூடியிருப்பவர் நால்வரும், சுரேச்வராச்சாரியர், தோடகாச்சாரியர், பத்மபாதர், அஸ்தாமலகர் என்னும் நான்குசீடர்களுமாவார். இவர் களுள்பத்மபாதர்என்னும்சீடர், தமது குருவின் மகிமையால், ஆற்று நீரில் தோன்றிய தாமரைமலர்களின் மேற் பாதம் வைத்து நடந்து வந்தவர். ஹஸ்தாமலகரோ, அந்தணர் குலத்துப் பிறவி ஊமையாய்ப் பிறந்து நமது ஆச்சாரிய சுவாமிகளின் மகிமையால்ஞானம் உதித்துப்பேச வாரம்பித்த புண்ணியவான். கர்ம ஞான மார்க்க வாதத்தில் நமது ஆச்சாரியஸ்வாமிகளால் தோல்வியுற்ற மண்டனமிசிரர் என்னும் பெரியாரே சுரேச்வராச்சாரியார் என்னும் சீடராவார்.


சுவாமிகள் கருவிலேயே திருவுடையவராக வவதரித்துற்றமையால், சிறுபிராய முதலே திக்விஜயம் செய்ய ஆரம்பித்துப் பற்பலவிதமாகப் பரவிக்கிடந்த நாஸ்திக முதலிய பலதுர்மதங்களைக் கண்டித்து, வைதிகமாகிய ஆஸ்திக மதத்தை ஸ்தாபித்துத், தமது வாச்வன்மையால் சுருதியையும் யுக்தியையும் யநுபவத்தையும் காட்டி, "உலகமெல்லாம் கடவுண்மயம்; உயிர்களெல்லாம் கடவுண்மயம்" என்னும் உயர்ந்த உண்மையை நிலைநிறுத்தி, அவ்வுண்மையை யுண்மையாகப் பற்றி யநுவத்தில் ஒழுகுபவர்க்கு விரைவில் துக்க நிவ்ருத்தியையும் சுகப்பிராப்தியையும் பல நியாயங்களாற் கூட்டிக் கொடுத்த மஹான்.



யோக பலத்திற்கைவந்த மனப்பழக்கத்துடன் அவதரித்தமையால், வாழ்க்கையிற் றோன்றும் வறுமை துக்கம் வியாதி மரணம் முதலியன உற்றுப், பரமதுக்கிகளாகத் தம்மைநாடிய ஜீவர்கட்குத் தமதுயோகபலமகிமையினால், அகடிதக்கடனஸாமர்த்தியம் காட்டி, அவ்வவர் துக்க காரணங்களை அவ்வக் கணங்களிலே யாவரும் காணப்போக்கிய கருணாமூர்த்தி.

மந்திரசாஸ்திரங்களின் மஹிமைகளையும் வன்மைகளையும் உணர்ந்து அம்மந்திரங்கள் யாவற்றினும் கைதேர்ந்திருந்தமையால், தம்மையும் தமதுசீடர்களையும் தமதுகொள்கையையும் அழிக்கவந்து, வஞ்சகமாகக் கொலை முதலியன செய்ய உத்தேசித்த க்ஷுத்ர மந்திரப்ரயோகிகளை, ஸன்மந்திர பலங்களால் ஸத்தேவதா உபாஸனைகளைச் செய்து அத்தேவதைகளின் பலத்தால் ஆசறக் கொன்று வென்ற துஷ்ட நிக்ரஹ மூர்த்தியாவார்.

சுமார் உ௦௦௦ ஆண்டுகட்கு முன் அதாவது கலி ௩௦ருஅ க்குச் சரியான விக்ரம சக கக-வது ஈச்வர வருஷம் வைசாக சுத்தபஞ்சமி திதியில், கேரள நாட்டில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் வசித்திருந்த சிவ பக்த சிரேஷ்டராகிய—சீலகுண உத்தமராகிய சிவகுரு என்னும் பெரியாருடைய தவத்தின் பயனாக, அவரது தர்ம பத்தினியான ஆர்யாம்பிகையினிடம் அவதரித்தவர். அக்குழந்தையின் பிறப்பின் காரணாகிய பிதாவின் சங்கரபக்தியினாலும், குழந்தையின் அங்கங்களின் தேஜஸினாலும், அக் குழந்தையின் பிற்கால சரித்திரங் கண்ட முன்னறிவினாலும் அக்குழந்தைக்குப் பெரியார் சங்கரர் என்னும் திருநாமம் இட்டழைத்தனர்.



பெயருக்குத்தக்கபடியே ஆக்குழந்தை, உலகச் சிற்றின்பத்தில்மனதை நாட விடாமலும், தமக்கென வாழாமலும் பிறர்க்கு உழைக்கவுமே சுகத்தை அளிப்பவராகவே தமது உள்ளம் உரை செயல்களால் உழைத்து வந்தனர் என்பது சரித்திரங் கண்ட உண்மையாகும்.

உண்மையான ஸாதுக்களை யுண்மையான பக்தியுடன் கருதி யுபசரிப்பவர்கட்கு அம்மஹான்கள் உலக சுகத்தை யுடனே அருள்வர் என்னும் பொது உண்மையைப் பிக்ஷைக்காரராகிய தமக்கு அளிக்க யாதுங் காணாது மயங்கி உண்மையான பத்தியுடன் ஒரு அழுகிய நெல்லிக்கனியை யளித்த ஒரு ஏழைப்பார்ப்பனியின்மீது கருணை கூர்ந்து, ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் துதியால், அவ்வேழை வீடெல்லாம் பொன்னெல்லிக்கனியினால் நிறைந்திருக்கும்படியாக ஸ்வர்ணமலக தாரையைப் பெய்வித்துக் காட்டினர்.

"தாய் சொற்றுறத்தல் தகாது" என்னும் உண்மையையும், "முற்றத்துறந்த முனிவர்க்கும், பெற்று வளர்த்ததாயின் கருமம் பிறழப்படாது" என்னும் உண்மையையும் நாட்டவே, ஸந்யாஸிக தர்மம் கொள்ளவேண்டிய பக்குவத்துடன் அவதரித்த சங்கரர், தமது தந்தை யிறந்தபின்னும், தாயின் பணிவிடையிற்றங்கியிருந்தும். பிறகு தாயின் பணிகொண்டு ஸந்யாஸங் கொண்டும், கடைசியில் தாயின் மரண காலத்தை யோகபலத்தி லறிந்து தந்நாடு வந்து தாயின் அருகமர்ந்து தாய்க்குரிய சர்மங்களையாற்றிப், பெற்று வளர்த்த தாயே பரமதெய்வம் என்னும் "வந்தேமாதர" உண்மையை வகுத்துக்காட்டினர்.

எத்துணை யறிவு பெற்றிருந்தவராயினும், கருவிலேயே ஸகல கலாஞானங்களையும் பெற்றுப் பிறந்த உத்தமயோகிகளாயினும் பௌதிக சரீரம் பெற்ற யாவரும் ஒரு குருவை முன்னிட்டுக்கொண்டு முக்திப்பேற்றை யடைவது முதன்மை நெறியென்பதைத் தாம், ஸ்ரீ கோவிந்தபகவத் பாதர் என்னும் குருமூர்த்தியை யாச்ரயித்து ஞானப் பிரஸாதம் பெற்று சங்கரபகவத் பாதர் என்னும் திருநாமம் பெற்றுக் காட்டினர்.

ஞானத்தில் முனைத்து நிற்காதகர்மமார்க்கம் எத்துணைச் சிறப்புளதாகக் கருதப்படினும், அது முக்திக்கு வழியாகாது என்னும் உண்மையை, "கர்மமார்க்கத்தைத் தவிர பக்திஞானங்கள் பயனில்லை யென்று வாதித்து, ஸன்யாஸிகளைப் பார்ப்பதுமில்லை" யென் றிருந்த மண்டனமிச்ரர் என்னும் கர்மயோகியுடன்வாதித்து வெற்றி கொண்டு காட்டினர்.

"சகல சீவர்களும் ஸமானர்; யாவரும் பரமாத்மாவின் சொருபர்களே; சீவர்களில் உயர்வு தாழ்வு கருதுகிறவர்கள் பரமாத்மாவின் சொருபத்தை யறியாதவராகிறார்கள். பாரமார்த்திக தத்துவத்தை யுணர்கள் கெடுத்தவர்களுமாகிறார்கள்" என்னும் உண்மையை, "மநீஷா பஞ்சகம்" என்னும் தோத்திர நூலாலும் அதற்குக் காரணமானதொரு சண்டாள தரிசன ஸம்வாத ருபமான சரித்திரத்தாலும் தெரிய வைத்திருக்கிறார்.

பகவானுடைய பரத்வ நிலையை வேத வாக்கியங்களைக்கொண்டும், வியூக நிலையைப் பிரபஞ்சத்தோற்ற உடந்யாசங்களைக் கொண்டும், அந்தர்யாமி நிலையை ஸர்வமும் கடவுண்மயம் என்னும் வாதவுண்மைகளைக்கொண்டும், விபவநிலையைத் தமது அவதார சேஷ்டிதங்களைக்கொண்டும் சீவர்கட்குக் காட்டித்தந்ததுபோலவே, பகவானுடைய அர்ச்சை நிலையைக்காட்டும் பொருட்டு, ஸ்ரீகைலாசத்திலிருந்து பரமேச்வரரால் தாம் பெற்றுக் கொணர்ந்த, யோக போக முக்தி வர மோக்ஷம் என்னும் ஐந்து ஸ்படிக லிங்கங்களையும் முறையே, காஞ்சியிலும் சிருங்ககிரியிலும் பதரியிலும் நேபாளத்திலும் சிதம்பரத்திலும் ஸ்தாபித்து, சீவர்கள் ஆர்ச்சனையினால்பகவத்பிரஸாதத்தைப் பெற்றுய்யுமாறுசெய்வித்தார்.

இனியொரு தாய்வயிற்றிற் பிறவாத மார்க்கமாகிய ஸந்யாஸ மார்க்கத்தை யவலம்பித்தவராக இருப்பினும், பிரபஞ்ச வித்தை யாவும் தெரிந்திருந்தாலல்லாமல் ஸர்வதந்திர ஸ்வதந்திரராக இருந்து முக்திப் பேற்றை யடையமுடியாது என்னும் உண்மையைக் காட்டுதற்காக, உபயபாரதியின் காமசாஸ்திர வினாக்களைக் காரணமாகக் கொண்டு, அமருகன் என்னும் அரசன் தேஹத்திற் பிரவேசம் செய்து, ஒரு மாதத் தவணையிற் காமசாஸ்திரத்தை யநுபவத்தாலுணர்ந்து, "அமருகம்" என்னும் காம சாஸ்திரத்தை யுணர்த்திப் பின் வெளி வந்து உபயபாரதியை வாதில் வெற்றி கொண்டார்.

தமது ௩௨ வது வயதிற்குள்முன்னர்க்கூறிய ஐந்து இடங்களிலும் ஐந்துமடங்களை ஸ்தாபித்து, அவற்றுக்குத்தமது சீடர்களை யதிபதிகளாகநியமித்து, ௩௨-வயதில்காஞ்சி க்ஷேத்திரத்தில் காமாட்சி தேவியின் ஸந்நிதானத்தில்தமது ஸ்வரூபமாகிய பரமேச்வர ஸ்வரூபத்தை யடைந்தார் என்பர்.

இப்பெரியார் செய்தருளிய நூல்களாகிய சல்யாண விருஷ்டி ஸ்தவம், காருண்ய பூர்ண ஸ்தவம், மஹாபகா ஸ்தவம், ஸந்யாஸோத்தாரம், நிரீதிஸ்தவம், கங்காஷ்டகம், மனீஷா பஞ்சகம், சிவாத்ம பூர்ணநுபவ ஸ்தோத்திர மஞ்சரி, பிரம்ம சூத்ர வியாக்யானம், பஞ்சருத்ரோபநிஷத வ்யாக்யானம், நரஸிம்மதாபனி வ்யாக்யானம், கௌஷிதகீ ப்ராம்மண வ்யாக்யானம், ஸ்ரீ ருத்ராத்யாய வ்யாக்யானம், பகவத்கீதா பாஷ்ய வ்யாக்யானம், ஸநத்ஸுஜாதீய வ்யாக்யானம், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்ய வ்யாக்யானம், ஆத்மபோதம், கலா ரோகணம், தத்வாலோகம், அபரோக்ஷாநுபூதி, அத்வைத ஸஹஸ்ரம், உபதேச ஸஹஸ்ரம், யுக்திச்லோகாஷ்டசதி, வாகீச்வரீ ஸ்தவம், அமருகம் என்னும் இவை இன்றைக்குமிருந்து அவர்கள் மகிமையையும் ஞானத்தையும் விளக்கி உலகை யுய்வித்துக் கொண்டிருக்கின்றன.

ஈந்தட்டா நகரத்தாரும் இடும்பய்யா பூசையும்.

இவ்வூரில் சமீபத்தில் நடந்த இடும்பய்யா பூசையைப் பலிப்பூசையை விடுத்து மகேஸ்வர பூசையாக நடத்தி வைப்பதென நகரத்தார்களனைவரும் ஏகமனதாய்த்தீர்மானம் செய்து, சைவமணம் கமழவும் அடியார்கள் மனம் குளிரவும் அன்புடன் நடத்திவைத்தது இவ்வூர் நகரத்தார்களுடைய ஒற்றுமையையும் ஜீவகாருண்யத்தையும் பெரிதும் புலப்படுத்தியது. இவ்வூர் நகரத்தார்களைப்போல பர்மா மலாய்வாசிகள் அனைவரும் இடும்பய்யா பூசையைச் சைவமணம் கமழும் மகேஸ்வர பூசையாக நடத்தி ஆனந்திக்குமாறு பன்முறை வந்தனத்துடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு வழி காட்டிய ஈந்தட்டா நகரத்தார்களுக்கு எல்லாம் வல்ல இறைவனும் ஸ்ரீ குகப்பெருமான் துணை புரிவாராக.

ராம. அழகப்பன்,


ஈந்தட்டாவாசி.

அரிமழம்.

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரருக்குச் சென்ற பங்குனித் திங்கள் உ௧-ம் நாள் துவஜாரோகணம் செய்யப்பெற்று நாளிது ௩௧-ந் தேதியோடு பிரமோத்சவம் சிறப்பாக நடைபெற்றது. ஒன்பதாவது விழாவில் தேருக்கு நூற்றெட்டுச் சிதறுகாய்உடைக்கப்பெற்று நமப்பார்வதி பதயே என்ற அரியகோஷத்தினிடையே வடம்பிடித்துத் தேர் மூன்று நாழிகையளவில் நிலைக்கு வந்தது அனைவருக்கும் ஆனந்தத்தைத் தந்தது. முன்போல் இவ்வருஷம் பலி நடைபெறுவாறு பகீரதப்பிரயத்தனம் செய்து நிறுத்தியது ஆறுதலைத்தந்தது. சகோதரப்பிராணிகளின் ஆருயிர் உடலோடு பொருந்தி நிற்பது இன்பந் தருகின்றது. முன்னைய ஆண்டுகளை போல் தேர் தாமதியாது விரைவில் வந்தது சிந்திக்கத்தக்கது. அடுத்து நடைபெறும் உத்சவாதிகளில் ஜீவகாருண்ய சீலர்கள் பலி நடைபெறாதவாறுஏழைப்பிராணிகளைக் காக்கமுந்துவார்கள் என்று நம்புகிறேன்.

சே. முருகப்பன்.

இம்மஹானது, அவதாரமானது நிகழும் சித்திரை மாதம் உ௫.௳. வியாழக்கிழமையில் வருகிறது. அத்தினத்தை, ஞானத்தைக் கோருபவர்களும் சங்கர பக்தர்களும் ஆச்சார்யபீடத்தைக் கவுரவிக்கும் மஹான்களும் பிறரும் பக்தி பூர்வகமாகத் திருநாளெனக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



இப்படத்தின் முற்பகுதியில் தலையில் துண்டு கட்டிக்கொண்டு கக்கத்தில் வேஷ்டிப் பொட்டணம் வைத்துக்கொண்டிருப்பவர், மனைவி மக்களை விடுத்து அந்நிய நாட்டிற்குக் கொண்டுவிற்கச் செல்கிறார். மனைவி மக்களை விடுத்துச் செல்வதால் அவர் முகத்தில் விசனக்குறி நிரம்பி யிருக்கிறது. பக்கத்தில் அவரைப்போல் ஒரு பொட்டணம் வைத்துக்கொண்டு நிற்கும் பையனும் அவருடன் செல்கிறான். இருவரும் பிரயாணப் படுகிறார்கள். பலர் இவர்களை வழியனுப்பச் செல்கிறார்கள். சில பெரியவர்கள் சகுனம் பார்க்கிறார்கள். குருவிகள் பறக்கின்றன.

பிற்பகுதியில் ஊருக்குச் செல்லும் கணவரின் பிரிவுக்கு அவர் மனைவி வீட்டிலிருந்து வருந்துகிறார்; துக்கப்படுகிறார்; ஊர்ப்பெண்களெல்லாம் வந்து, "பைத்தியக்காரி! ஏன் வருத்தப்படுகிறாய்; உனக்கென்ன குறைவு; இங்கே சும்மாவிருந்தால் என்ன பிரயோஜனம்; பணமில்லாது என்ன செய்யமுடியும்; ஏன் வருத்தப்படுகிறாய்; நமது ஜாதி வழக்கந்தானே இது; நீ சும்மாவிரு; வைர நகை கொண்டுவருவார்கள்; சாமான்கள் வண்டிவண்டியாகக் கொண்டு வருவார்கள்; சேலைகளெல்லாம் வாங்கி வருவார்கள்." என்று சமாதானம் சொல்லுகிறார்கள்.

விகுதி விளக்கம்.

நமது ஊழியன் ௩௧—இதழில் "செட்டியாருக்கு விருக்கள்" என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்ட கட்டுரையில் செட்டு என்னும் பகுதி.............. ஒன்றுண்டா? என்னும் பகுதியின்கணுள்ள விகுதியைப் பற்றிய விஷயங்களுக்கு மட்டும் அறிந்தவரை யெழுதுகிறேன். மரியாதை யென்னுஞ் சொல் நூல்வழக்கில் அருகியும், உலகவழக்கிற் பயின்றும் வரும் ஓர்சொல். இச்சொல்லிற்குஒழுங்கு நீதி, முதலிய பொருள்கள் கொள்ளப்படும். அவற்றுள் ஈண்டு "ஒழுங்கு" என்னும் பொருள் தக்கதாகும். ஈங்கு ஒழுங்காவது பெரியோர்களை அழைக்கும்முறை. அஃதாவது:—உயர்த்திக் கூறல். எனவே, மரியாதை விகுதியாவது பால் குறியாது ஒரு பொருளின் உயர்வைக் குறித்தற்கு அப்பொருட் பெயரோடு சேர்த்துக் கூறப்படும் ஓர் விகுதியாகும். அப்படியொன்றுண்டா? என்பது வினா. உயர்வு குறிக்கும் விகுதியெனத் தனியே ஓர் விகுதியில்லை. 'ஆர்' என்னுமிடைச்சொல் பன்மை குறியாது சில ஒருமைப்பெயர்களோடு சேர்ந்து அப்பெயர்ப் பொருளின் உயர்வை விளக்கிவரும். நன்னூல் பெயரியல் "ஒருவரென்ப துயரிருபாற்றாய்ப், பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப" என்னுஞ் சூத்திரத்தில் உரையில் கோடலென்னும் உத்தியாற் கூறப்பட்டுள்ள விஷயங்களைக் கவனித்தால் இது விளங்கும். இனித் தொல்காப்பியர் ஒரு பொருளை உயர்வு கருதிப் பன்மையாகக் கூறுதற்கு, "ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியும்" ஒன்றனைக்கூறும் பன்மைக் கிளவியும்" (தொல்—சொல்) எனத்தனிச் சூத்திரஞ் செய்தார். அங்ஙனம் ஒருமைப் பன்மைக்குரிய இடைச்சொல்லேற்று வருதல் வழுவமைதியென்று கூறப்படுமென்பதும் தொல்காப்பியர் கருத்தாகும். உயர்வு முதலியவற்றால், பால் திணை மாறிவருமென்பதும், அங்ஙனம் வருதல் வழுவமைதியென்பதும் நன்னூற் பொதுவியலில், "உவப்பினும் உயர்வினும்" என்னுஞ் சூத்திரத்திற் காண்க.

வைசியநாட்டுச்செய்தி

புதுவயல்.

ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி சங்கத்தின் இரண்டாவதாண்டு விழா:—நிகழும் ரக்தாக்ஷி-ௗ சித்திரை-மீ ககூ-உ (க—ரு—உச) வியாழக்கிழமை காலை மாலை இருவேளைகளிலும் மகிபாலன் பட்டி வித்வான் திருமிகு மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் பல அறிஞர்கள் உபந்யசிப்பார்கள் என்று ஷை சங்கத்தார் தெரிவிக்கிறார்கள்.

* * *

கூழிபிறைசிவனடியார் திருக்கூட்டம்.

இத்திருக்கூட்டத்தில் நிர்வாக அங்கத்தினராயிருந்துவந்த ஸ்ரீமான் கா. பழ. மு. சுப. இராமசாமிச் செட்டியார் அவர்கள், தொழில்முறை விஷயமாக அந்நியநாடு சென்றிருப்பதற்குப் பதிலாக ஸ்ரீமாந், நா. க. பழ. பழநியப்ப செட்டியாரவர்களை நாளிது க௦-உ நடைபெற்ற நிர்வாக சபையில் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றது என்று உபகாரியதரிசி ஸ்ரீமாந் வீ. பெரி. பழ. சொக்கலிங்கம்செட்டியார் எழுதுகிறார்.

* * *

அரிமழத்தில் கும்பாபிஷேகம்.

நாளிது திங்கள் கஉ-ம் நாள் காலை ஏழரை நாழிகைக்கு ஸ்ரீ சேவுக சுவாமிகள் சமாதிக்குக் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை ௬-மணி முதல் பல ஊர்களிலிருந்தும் நகரத்தார்கள் வந்து பட்டுச்சாத்தித் தெரிசனம் செய்துகொண்டு சென்றார்கள். இரவு சிவன் கோவிலில் சுவாமி திருஉலாப்போந்து காக்ஷிகொடுத்தருளினர். நகரத்தாரவர்கட்குக் குருபூஜை மடத்தில் விருந்து நடந்தது. கும்பாபிஷேகத்திற்கு ஸ்ரீ கோவிலூர் மடாதிபதி அவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கங-ம் நாள் குருபூஜையும் மிகச்சிறப்பாக நடைபெற்றது என்று நமது நிருபர் எழுதுகிறார்.

* * *

கோப்பனாப்பட்டி.

இந்நகரில் நாற்பது ஆண்டுகளாக மாரிமுத்துச்சாமி யென்றொரு மகான் இருந்து இவ்வூருக்குச் சமீபமாகஉள்ள செம்பூதிக் கிராமத்தில், ஒன்றரை மாதத்திற்குமுன் நிட்டை கூடி சமாதி அடைந்து விட்டார்கள். கட்டிடமும் அழகாய் அமைக்கப் பெற்றிருக்கிறது. நாளிதுமாதம் கங-உ வெள்ளிக்கிழமை குருபூஜை நடந்தது. அத்தினத்தில் அடியார்களுக்கும் ஏனையோர்கட்குமாக ஆயிரம்பேருக்கதிகமாய் அன்னமளிக்கப் பட்டது என்று ஸ்ரீமான் எஸ். இராமநாதன் செட்டியார் எழுதுகிறார்.

* * *

தேவகோட்டை.

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

பெருமாள்கோவில் திருவிழா:—வடகலைப் பெருமாள்கோவில் திருவிழா முடிந்துவிட்டது. தென்கலைப் பெருமாள் கோவில் திருவிழா இம்மாதம் க௦-உ துவக்கமாகி நடந்து வருகிறது. நேற்று அரங்கநாதர் கெருடவாகனத்தில் ஆரோகணித்து எழுந்தருளினர். ஏராளமான ஜனக்கூட்டம் வந்திருந்தது. திருவாவடுதுரை மடத்து நாகசுர வித்வான் ராஜரத்னம் ககூ-உ வரை இங்குக் கச்சேரிகள் நிகழ்த்துவாரென அறிகிறோம். சில வருடங்களாக, சதிர்க்கச்சேரி முதலிய விலைமாதர்ஆர்ப்பாட்டங்களில்லாதிருப்பது போற்றத் தக்கதே.

தாலூகா ஸ்தலஸ்தாபனம்— தேவகோட்டை தாலூகா சபையில் ஒரு கிறிஸ்தவ அங்கத்தினர் நியமநம்செய்யும் விஷயமாய் ஸ்தலசுயாட்சி இலாகாஇவ்வூர் ஆட்சித் தலைவருடன் கடிதப்போக்குவரவு செய்து கொண்டிருப்பதாயும், அனேகமாக இக்னேஷியஸ் என்பார் நியமிக்கப்படலாமெனவும் ஓர் வதந்தி யுலாவுகிறது.

ஸ்ரீ விவேகானந்த புத்தகசாலை:— இப்புத்தகசாலையின் ஆதரவில் கஉ-உ வியாழக்கிழமையன்று மாலை ௬-மணிக்கு சிவன்கோவில் மந்திரோபதேசக் கொட்டகையில் உயர்திரு, மருவூர் கணேச சாஸ்திரியார் அவர்கள் 'பக்தி' என்னும் விடயம் பற்றிச் சுமார் இரண்டு மணிநேரம் ஓர் சொற்பெருக்கிட்டார்கள். கங-உ வெள்ளிக்கிழமையன்றும் அதேஇடத்தில் மாலை ௬-௩௦க்கு "மனிதர்கள் கைக்கொள்ளவேண்டிய எட்டுக் குணங்கள்" என்னும் விடயமாய்ச் சுமார் உ-௩௦ மணிநேரம் ஓர் சொற்பெருக்கிட்டார்கள்.

'ஆர்' மரியாதை குறித்த விகுதியாக வெடுத்தாளப்பட்ட இடமுண்டா வென்பது வினா.

அகத்தியனார் தொல்காப்பியனார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றார்போன்ற பெயர்களில் 'ஆர்' என்னுமிடைச்சொல் உயர்வு குறித்து வருதல் காண்க. அஃறிணைப் பொருளோடு இவ்விடைச்சொல் சேர்ந்து உயர்வு விளக்கி வருதலும் உண்டு.

"செந்தார்ப் பசுங்கிளியார்சென்றார்க்கோ ரின்னுரை, தந்தாரே றந்தாரென் னுயிர்". நாலடியார். திருக்கோவையார் என்பவற்றிற் காண்க. இனி, 'ஆர்' என்னுமிடைச்சொல்லே யன்றி "அர்" என்னுமிடைச்சொல் அங்ஙனம் விளக்கிவருதலுமுண்டு.

சொ. பனையப்ப செட்டியார்,
சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி.

பிறநாட்டுச் செய்தி.

ஜர்மனியில் மெயின்ஸ் பட்டணத்துக் கோவிலிலுள்ள கடிகாரத்துக்கு ரு௦௦-ஆண்டுக்கொரு முறைதான் சாவி கொடுக்கிறார்களாம்.

* * *

ஆகாயத்திற் பலவிதமான வர்ணப் புகையால் எழுதி விளம்பரம் செய்யும் முறையை இங்கிலாந்தில் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார்.

* * *

கலிபாவாக இருந்தமாஜீ துருக்கி சுல்தானுக்கு இரண்டு மனைவியர் இருப்பதால், அவர் சுவிட்ஸர்லாந்திலிருத்தல் கூடாதென்று அந்நாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றனவாம்.

* * *

இங்கிலாந்தில் நடக்கும் ஏகாதிபத்தியப் பொருட்காட்சிக்கு அமெரிக்காவிலிருந்து ௩-லக்ஷம் பேர் வருவார்களாம். அவர்கள் மொத்தம் ரு-கோடி பவுன் செலவு செய்வார்களாம்.

* * *

இங்கிலாந்தில் கல்விக்காக ஒரு அணாச் செலவு செய்தால் குடிக்காக எட்டு அணாச் செலவு செய்கிறார்களென்று செலவு விஹிதக் கணக்கர் குறிக்கிறார்கள். இதுதான் நாகரிகத்தின் அறிகுறி போலும்.

* * *

தென் ஆப்பிரிக்காவை விட்டு ஸ்ரீமதி ஸரோஜனிதேவி ஏப்ரில்—உஅ-உ புறப்பட்டுக் கிழக்கு ஆப்பிரிக்காவில் இரண்டு வாரங்கள் தங்கி யிருந்து இந்தியாவுக்கு மே மாதம் ௩-தேதி "கரோவா" கப்பலில் வந்து சேர்வார்.

* * *

அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் ஜப்பானியர் குடியேற அநுமதிக்க வேண்டுமென்ற மசோதாவை ஸெனெட் மகாஸபை நிராகரித்துவிட்டது. ஸெனெட் சபையின் தீர்ப்பை ஜனாதிபதி நிராகரிக்க வேண்டுமென்று பத்திரிகைகள் கிளர்ச்சி செய்கின்றன.

* * *

குடி யரசுக் கட்சித் தலைவரான டிவேலராவை விடுவித்துவிட வேண்டுமென்று அயர்லாந்துஸ்வாதீன அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கான முயற்சியை அமெரிக்கா ஐக்கிய மாகாணத் தேசிய ஸபை யங்கத்தினர்கள் பலர் செய்து வருகின்றனர்.

இந்தியச் செய்தி.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் வைக்கம் ஸத்யாக்கிரஹ நிதிக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடையனுப்பியிருக்கிறார்.

* * *

அலகபாத் நகரபரிபாலன சபையின் தலைவரான பண்டித ஜாவாஹர்லால் நேரு அப்பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார்.

* * *

பெண்கட்குக் கௌரவ தண்டாதிகாரப்பதவிகொடுக்கத்தீர்மானித்திருப்பது பற்றிப் பம்பாய் ஸ்திரீகள் ஒரு பொதுக்கூட்டம் கூடிச் சந்தோஷம் தெரிவித்தார்கள்.

* * *

வைக்கம் ஸத்தியாக்கிரஹ நிதிக்கு ஸ்ரீமான் ச. இராஜகோபாலாச்சாரியாரிடமிருந்து ரூ. ரு௦௦ வந்திருக்கிறதாம். ஸ்ரீமான் சி. ஆர் ரெட்டியும் நன்கொடை யனுப்பியிருக்கிறார்.

* * *

பம்பாய் மாகாண நாட்டுப்புறங்களிலிருந்து கஉ௦ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த ௩௬௩ பெயர்கள் பம்பாய் இந்து சபையின் ஆதரவில் இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

* * *

வைத்தியர் வரதராஜலு நாயுடுவால் வைக்கம் ஸத்தியாக்கிரஹ நிதிக்கு அனுப்பப்பட்ட பணம் இன்னும் தபாற்சாவடி மூலம் சாதரா செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

* * *

திருச்சூர் நகரபரிபாலன் ஸபையின் கீழிருக்கும் எல்லாச் சாலைகளிலும் சந்துகளிலும் சாதி மத வித்தியாசமின்றி ஜனங்களனைவரும் செல்லலாமென்னும் அறிவிப்பை அச்சபையார் பஹிரங்கப்படுத்திருக்கிறார்கள்.

* * *

பம்பாயில் கிழமண மறுப்புச்சங்கம் சில வருஷங்கட்கு முன் ஏற்பட்டுச் சிறு பெண்களைக் கிழவர்கள் கல்யாணம் செய்வதைத் தடுத்து வருகிறது. தென்னாட்டிலும் இத்தகைய சங்கமொன்று அவசியம் தேவையன்றோ?

* * *

இந்தியா மந்திரி ஸபையில் ஓர் அங்கத்தினரான ஸ்ரீமான் பி. ராஜகோபாலாச்சாரியாரின் நெருங்கிய பந்துவான ஸ்ரீமதி சிதம்மாள் சென்னையிற் படித்து எம். ஏ. பரீக்ஷை தேறி, தற்போது இங்கிலாந்துக்குப் படிக்கப் போயிருக்கிறார்.

* * *

காந்தி மாதத்துக் கதர் விற்பனைக்கணக்கை யெடுத்து ஆராய்ச்சி செய்ததில், தமிழ்நாடே தலைமை வஹித்திருக்கிற தென்று, கதர் சமாசார இலாகா அறிவிக்கின்றது. மொத்தத்தில் ருகூ,௦௦௦ ரூ. பெறுமான கதர் காந்தி மாதத்தில் தமிழ் நாட்டில் விற்கப்பட்டிருக்கிறது.

* * *

திருவெறும்பியூர்ப் பிரம்மோத்சவம் நிகழும் சித்திரைத் திங்கள் உஎ-ம் நாள் சுக்கிரவாரம் முதல் வைகாசி எ-ம் நாள் வரை நடைபெறுமென்று, அந்தத் தேவஸ்தான தர்மகர்த்தர் ஸ்ரீமான் க. அ. சு. ராம. ராமநாதன் செட்டியாரவர்கள் உத்சவப்பத்திரிகை மூலம் தெரிவிக்கிறார்கள்.

* * *

விஞ்ஞான சாஸ்திரத்தில் தாம் கண்ட அரிய உண்மைகளை மேல் நாடுகளில்தெரிவிக்கும்பொருட்டுச் சென்றிருந்த நம் இந்திய விஞ்ஞான சாஸ்திர வித்வ சிரோமணி ஸ்ரீமான் ஜகதீச சந்திரபோஸ் அவர்கள், தமது திக்விஜயத்தை நிறைவேற்றிக்கொண்டு ஏப்ரில்மீ உஉ-உ கல்கத்தா வந்துசேர்ந்தார்கள்.

* * *

இரங்கூன் வைசிய நேசன் காரியாலயத்திலிருந்து, ரக்தாக்ஷியாண்டுத் தேதிப்படமொன்று வரப்பெற்றோம். அப்படம் தினத்துக்கு ஒரு தாளாக அமைக்கப்பெற்றும், ஒவ்வொரு தினத்திலும், தமிழ்த்தேதி ஆங்கிலத்தேதி பர்மியத்தேதிகளும் திதி நக்ஷத்திரங்களும் குறிக்கப்பெற்றும், ஒவ்வொரு தாளின் அடிப்புறத்திலும் நீதி வாக்கியமொன்று பொறிக்கப்பெற்றும், ஒரு அழகான சித்திரங்களுடன் அச்சிட்ட அட்டையில் அத்தாள் தொகுதிகள் தைக்கப்பெற்றும் பார்வைக்கு அழகாக இருக்கின்றது.

விதவா விவாகம்.

காந்தியடிகளின் அபிப்பிராயம்


[illegible]

ஆதிசப பிராமணர் சபை[illegible] பதினேழாவது வருஷாந்தக் [illegible] டத்தில் அக்கிராசன[illegible] ஸ்ரீமான் சக்லா என்பவர் [illegible] தர்ப்பங்களில் விதவா விவாகம் செய்துகொள்வது [illegible] மென்று பேசியது வைதிகர்களை திடுக்கிடச்செய்திருக்கிறது. விவாதத்திற்கு இடமான இந்தப் பிரச்னையைப்பற்றி ஸ்ரீமான் சக்லா மகாத்மா காந்தியின் அபிப்பிராயத்தைக் கேட்டதில், அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:—

"விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்னும் ஏற்பாடு ஹிந்து சமூகத்திற்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தாரமிழந்த ஆண்மக்கள் மீண்டும் விவாகம் செய்துகொள்ள ஆவலுள்ளவர்களாயிருக்கும் வரையில், பெண்மக்கள் விஷயத்தில் மட்டும் இக்கட்டுப்பாடு அனுஷ்டிக்கப் படுவதை பெருஞ் சுமையென்றே கருதல் வேண்டும். இளம் விதவைகளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குக் கொடுந்துக்கம் உண்டாகிறதென்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மேலும் வேறு வழியின்றி கட்டாயத்தின் பேரில் புனர் விவாகம் செய்து கொள்ளாம லிருப்பதில் எவ்விதச் சிறப்புமிருப்பதாக எனக்குத்தோன்றவில்லை. ஆகவேஇந்த நிலைமையில் எனது மனச்சாக்ஷி முழுதும் இடங்கொடாவிடினும், பால்ய விதவைகளின் புனர் விவாகத்தை நான் ஆதரிக்கிறேன். தங்கள் கணவன்மாரோடு கூடிவாழும் சந்தர்ப்பம் பெறாத இளம் வயதுடைய விதவைகள் புனர்விவாகம் செய்துகொள்ளலாமென்று ஸ்ரீமான் சக்லா சொல்வதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். மணமகன்களுக்கு மணமகளிருக்கும் வயதை நிர்ணயம் செய்துவிட வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்."

"நவசக்தி."

காலென் செயும்! வினை தானென்
செயும்!எனை நாடிவந்த
கோளென் செயும்!கொடுங் கூற்றென்
செயும்!குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையும் ஷண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.
—கந்தரலங்காரம்.



தனவைசிய ஊழியன்.
காரைக்குடி. சித்திரைமீ கஎஉ

காதலர் பிரிவு.

காதலராகிய கணவன்மனைவி இருவரும்ஒருவரை ஒருவர்பிரிந்து வாழ்தலைப்பற்றி எழுதுவான் இக்கட்டுரைக்குக் காதலர் பிரிவு என மகுடமிடப்பட்டது. இது பற்றி மூன்றும் பக்கத்தில் ஒரு ஓவியம் பொறிக்கப் பெற்றுளது. இயற்கையில் இந்நாள் நமது சமூகத்தில் நடைபெறுவதையே அச் சித்திரம் காட்டுகிறது. இது நம்மவர் பெரிதும் ஆராயவேண்டிய ஒரு பொருள்.

நம்மவர் பன்னாட்களாக இவ்வழக்கத்தைக்—(மனைவியைத்தனியே விடுத்துப் பொருளீட்டுவான் பிரிந்து சென்று பல்லாண்டுறையும் வழக்கத்தை) கையாண்டு வருகின்றனர். நாயகன், நாயகி என இருவரை இணைத்துவிட்டால் அவ்விருவரும் பிரிந்துறைதல் ஒன்று எந்த மனிதருக்கும் எந்தக் காலத்திலும் இருத்தல்சரியன்று. அதினும் நம்மவரிற் பெரும்பாலோர் இதை ஒரு பெரிய ஜாதி வழக்கமாக வைத்துக்கொண் டிருப்பது சற்றும் அங்கீகரிக்கத்தக்கதன்று. வைசியர்க்குப் பொருள்வயிற் பிரிதல் என ஒன்றுண்டு எனச் சிலர் வாதிடலாம். அங்ஙனமே வைத்துக்கொண்டாலும், இந்நாள் நடைமுறை மாதிரி மூன்று ஆண்டுகளும் அதற்குமேலும் காதலிருவர் பிரிந்திருக்க நியாயமில்லை. பழையகால சம்பிரதாயப்படி நாவாய்களில் பொருள்களை ஏற்றிக் கொண்டு வேற்றுநாடு சென்று விற்று வருதல் என்றிருக்குமானால் நீண்ட காலப்பிரிவு நேராது. நம்மவர் முன்னுள் பிற நாடணுகி விற்று வந்திருக்கிருர்களென்று தெரிகின்றது. அதனை இன்றும் நாம் "கொண்டுவிற்கச்சென்றிருக்கிருர்கள்" எனக்கூறும் கூற்று வலியுறுத்தும். நம்மவர் தொழில் மாறிவிட்டபோதினும்பெயர் மாறவில்லை. "கொண்டு விற்றல்" என்றால், இங்கிருந்து வினை பொருள்முதலியவற்றைக்கொண்டு போய் அங்கு விற்றல் என்பது பொருள். நம்மவர் பிற பொருள் கொண்டுவிற்றுச் செல்வப் பொருளீட்டி வந்தமையாற்றான் இப் பெயர்க்கு உரியராயினர்.

இந்நாள் அப்பழங்கதை பேசிப் பயனில்லை. பழைய கொண்டுவிற்றல் முறையை ஈண்டுக்கொணர்தல் முடியாது. பழைய உலகத்திற்கும் இப்புதிய உலகத்திற்கும் வேற்றுமை மிகப்பல. நடைமுறைகளெல்லாம் பெரிதும் பிறழ்ந்துகிடக்கும் இந்நாளில், உலகத்தை யறிந்து ஏற்றபடியாக நடவாதவர் பேரின்னலுக்குள்ளாவர். நம்மவர் அதனை உணர்ந்து நடத்தல் வேண்டும். "காலமறிந்து நடவாதான் கோலமழிந்து குரங்காவான்" என்பது பழமொழி.

இக்காலத்தில் எவரும் மனைவியைவிட்டுப் பிரிதல் ஆகாது. அதிலும் நம்மவர் கொண்டிருக்கும் இந்நீண்டகாலப் பிரிவுமுறை பெரிதும் வெறுக்கத்தக்கதாகும்.

கணவனும் மனைவியும் நீண்ட காலம் பிரிந்திருத்தலால் நேரும் கேடுகள் பலப்பல. அவ்வாறு பிரிந்து வாழ்தல் இயற்கைக்கு விரோதம், கணவன் மனைவி பிரிவென்பதுசாதாரணமானதோ? அது சிறிதேனும் ஆராய்வார்க்கு விளங்காமற் போகாது.

புதிய இருவர் சற்று அன்பு கொண்டு விட்டால் பிரிவு எவ்வளவு சிரமந் தருகிறது. அங்ஙனமாக இறுதிவரையும் இணைந்து வாழ வேண்டிய பெருங்காதல் பூண்ட இருவர் ஆண்டுக் கணக்காக ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்தல் என்ன முறை? அம்மம்ம! இப்பாழும் முறை கொடிது!! கொடிது!!! அநுபவிக்கும் நம்மவர் இத்துன்பத்தை உணராமலா விருப்பர்.?

நெறி பிறழாது வாழ்வார்க்குப் பிரிவுத்துன்பம் ஒவ்வொரு விநாடியும் தோற்றிக் கொண்டேயிருக்கும். பிறதுறைகளில் பேதுற்றழும் பித்தர்கட்கு இதனைப் பற்றிய எண்ணமே யிருக்க நியாயமில்லை. ஆருயிர்க்காதலியின் அன்பு மறவாத ஆண்டகையோர் அரைக்கணமும் ஆற்றுவரோ?

அன்பு பூண்டுறைந்த நண்பர்கள் பிரிவே பொராற்றுமையாகுமானல், வாழ்க்கைத்துணைவியின் பிரிவாற்றுமை எழுதுந் தரத்ததோ? கணவனைப் பிரிந்து இல்லிலுறையும் நல்ல நங்கைதான் எவ்வாறு சகிப்பாள்?

"செல்லாமை யுண்டேனில் எனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை" என்று, வள்ளுவருளியவாறு வழங்கும் தன்மையுடையாரன்றே வாழ்க்கைத் துணை. அங்ஙனம் மொழியுநர் நமது சமூகத்திற் காணப்படவில்லையே. கணவனைப் பிரிந்து வாழ்க்கையிற் பெரும்பகுதி கழிப்பது என்ன வாழ்க்கை. இதனை ஒழிக்க உடனே முந்துதல் வேண்டும். இதனைச் சீர்திருத்தினற்றான் சமூகம் புனிதமடையும்.

அந்நிய நாட்டுக்குப் பெண்களை அழைத்துச் செல்லலைப் பற்றிமுன்னர் பத்திரிகையில் வாத நடைபெற்றது. அது ஆலோசிக்கவேண்டிய விஷயமே. எல்லோரும் ஒன்று கூடித் தீர்மானித்து நடப்பதென்பது முடியாத காரியம். ஆனல் எங்கிருந்தாலும் கணவன் மனைவி ஆகிய இருவரும் பிரிந்திராது ஒரிடத்தில் இருத்தல் வேண்டுவது மட்டும் இன்றியமையாதது. பெண்கள் கப்பலேறிக் கூடாதென்

று இக்காலத்தில் அதனை அறிஞர் அங்கீகரிக்கமாட்டார். தொழிலை இங்கு செய்து மனைவியுடனிருக்குறையலாம். எல்லோரும் அத்தொழில்களை நிறுத்தி இங்கு வந்துவிடுதல் என்பதும் சுலபமான காரியமல்ல. எவ்வாருயினும் கணவனும் மனைவியும் ஒரிடத்திருக்க வேண்டுமென்பது மறுக்கமுடியாதது. அதனைப் பொருளாகக் கொண்டு, அதற்காவனபுரியவேண்டுவது நம்மவர் அனைவர்க்கும் கடன். பிரிந்து வாழ்ந்து பல தீமைகளைப் புரிவதைக் காட்டினும் உடனிருந்து எங்கு வாழ்ந்தாலும் நலம் என்பதை எவரும் மறுக்க மாட்டார்.

வீண் சண்டை.

சிலர் வீண் சண்டைகளைப் பத்திரிகையிற் கிளப்பிவிட்டு மக்கட்கு அருவருப்பையுண்டுபண்ணிவிடுகின்றனர். இப்பொழுது "செட்டியார்" சண்டைநடக்கிறது. "செட்டியார்" என்றுதான் கைச்சாத்திட வேண்டுமென்ற கிளர்ச்சி சிலரிடை ஏற்பட்டுப் பன்னாட்களாகின்றன. செட்டியார் என்று தான் இட வேண்டு மென்பதற்கு எத்துணையோ பல காரணங்கள் பலரால் நமது ஊழியனில் எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய மகாநாட்டிலும் தீர்மானிக்கப் பட்டது. அந்நாளில் இதனை எவரும் மறுக்கவில்லை. பின்னர் பர்மா நாட்டுக்கோட்டைச்செட்டியார்சங்கத்தார் தீர்மானித்தனர். அதுவும் சிறிது காலமாகிவிட்டது. நாம் அத்தீர்மானத்தைப் போற்றி எழுதியிருந்தோம். அப்பொழுதும் எவரும் ஆட்சேபிக்கவில்லை. பிறகு சமீபத்தில் "லோகோபகாரி" என்ற பத்திரிகையிற் கண்ட சிறு குறிப்புக் கொண்டு ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். அக்கேள்வியை அவர் கேட்டிருக்க வேண்டாம். கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்றல்ல இது. யாரேனும் எழுதும் எல்லாவற்றையும் நாம் நோக்கிக் கொண்டிருக்க முடியுமா? நமது ஜாதியைப் பற்றி ஆராய லோகோபகாரிக்கு என்ன அவசியம். "குயவனுக்குப் பல நாள் வேலை; தடியனுக்கு ஒரு விநாடிவேலை". செட்டியார் என்று தான் இட வேண்டுமென்பதற்கு நம்மவர் எடுத்துக்கொண்ட முயற்சி லோகோபகாரிக்குத் தெரியுமா? அதை நாம் பொருளாகக் கொண்டு இடர்ப்படுதல் வேண்டாம். எந்தப் பத்திரிகையில் என்ன எழுதினாலும் அதனை விவரித்துக் கொண்டிருப்பதை வேலையாகக் கொள்ளல் அறிவுடைமையாகாது. தவிர முருகனைச் "செட்டியார்" என்றழைத்ததுமுண்டு. "ஏரகத்துச்செட்டியாரே" என்பது ஒரு பழைய செய்யுளின் ஈற்றடி. ஈண்டு நாம் அவ்விஷயத்தில் புகவிரும்பவில்லை; அது விரியும்.

ஏதோ அன்பர் கேட்டுவிட்டார். ஒருவர் அதற்குப் பதிற் சொன்னால் அம்மட்டோடு அமைந்துவிடலாம். அப்பதிலில் எவ்விதமான தவறுவது ஆனந் தாக்கப விஷயமாவது இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அதற்குப் பதில் ஏன் எழுதல் வேண்டும். அப்படியாவது முறையாக எழுதப்பட்டிருக்கிறதா? எதையாவது எழுதிவிடுவதா? முக்கியப் பொருளுக்குப் பதிலில்லை. "நான் சொன்னது அநாவசியம் என்றால் நீ சொன்னதும் அப்படித்தான்" "முதறிவாளர் இல்லையென்கிறீர்; ஆகையினாலே நீர் சொல்வதைக் கேட்கமாட்டேன்" "மரியாதைக்குறைவுவந்திருக்கிறதா?" "உமது பேனாச்சொல்லும்" என்பனவாய் விவாதம். பெரியோர்களெல்லாரும் தம்மைப்பற்றிச்சொல்லிக்கொள்ளும் பொழுது "அறிவிலி" என்றும் "நாயினும் கடையேன்" என்றும் "சிறுமையேன்" என்றும் சொல்லியிருக்கிருர்கள். அவர்களையெல்லாம் அன்பர் எவ்வாறு கொள்வாரென்பது விளங்கவில்லை. பேரைப்பற்றி என்ன கவலை; விஷயம் வேண்டாமோ? ஆள் வேண்டுமோ? இலக்கியத்திற் சிறிது பயிற்சியுடைய—சில செய்யுட்கள் அறிந்த ஒருவர்கூட மரியாதை விகுதி உண்டா வெனக் கேட்கமாட்டாரே. ஒவ்வொன்றுக்கும் தக்க பதிலெழுதுவதாயின் விரியும்; இனி இத்தகைய வீண் சண்டைகளை எவரும் எழுப்பாதிருப்பாராக. நமது பத்திரிகையில் இன்னோரன்னவற்றிற்கு இடங்கிடைக்காதென்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். நம்மவர் விஷயங்களில் அந்நியர் தலையிட்டுச் சிலபல திருவிளையாடல் செய்வதாக ஒரு குருவி செப்புகிறது. அதுபற்றி அடுத்த கிழமை வரைவோம்.

தந்திச்செய்தி.

பிறுங்கு சித்திரை-மீ கசஉ

சென்னை உண்டியல்விலை நூற்று அறுபத் தைந்து.
ஈயம் விலை நூற்று இருபத்து ஒன்று.
ரப்பர் விலை [illegible]

இரங்கூன் சித்திரை-மீ [illegible]

இயந்திரஅரிசி பெரிது	[illegible]
டை சிறிது	[illegible]
மீடோன் அரிசி	[illegible]
பட்டு நெல்	[illegible]
இருப்புப்பாறை நெல்	[illegible]
புதிய வெள்ளைமொச்சை	[illegible]
பழையமொச்சை	[illegible]
சிவப்பு மொச்சை	[illegible]
உளுந்து	[illegible]
தட்டைப்பயறு	[illegible]
துவரை	[illegible]
கடலை	[illegible]
சோளம்	[illegible]
உண்டியல் வாங்கும்விலை	[illegible]
டை விற்கும் விலை	[illegible]
தங்கம்	[illegible]
வெள்ளி	[illegible]
பவுன் விலை	[illegible]

பணம் மற்றும்.

கப்பற் செய்தி.

டெல்டா என்னும் கப்பல் சித்திரை-மீ உக-தேதியும், சிலங்கா என்னும் கப்பல் சித்திரை மாதம் உச தேதியும் சென்னைக்கு வந்து இரண்டும், அம்மீ உ௫-ல் சிங்கப்பூர் புறப்படுகின்றன.

மதிப்புரை.

அருள்வாக் கருமறை.

இது, புதுவயல் தொ. மு. ஆ. வே. இரத்தினசபாபதி முதலியரால் இயற்றப்பட்ட பல பாடல்கள் அடங்கிய ஒருசிறுபுத்தகம். இதில் உள்ள அன்னைவாக்கியம், முறையீடு, வழிபாடுண்மை, [illegible] விண்ணப்பம், நெஞ்சறிவுறுத்தல் என்னும் துறைகளின்மேல் வைத்துப் பாடப்பெற்ற அருட்பாடல்கள் படிப்போரது மனதை யுருக்கக் கூடியவையாயிருக்கின்றன.

கனக ரத்ன தீபமணி.

இதுவும் முன்னையதுபோன்றே ஷெயாரால் இயற்றப்பட்டது. இதிலும் உபதேச வுண்மை, நீதி வெண்பா, ஞானக்கும்மி, நவரத்னமாலை என்னும் பிரிவுகளில் அடங்கியுள்ள இனியபாடல்கள் இருக்கின்றன. இவையிரண்டையும் வேண்டுவோர் "ரா. ஈசு ரத்தினம் பிள்ளையவர்கள், ஆந்திர பப்ளிஷிங்-ஹௌஸ் புதுச்சேரி" என்னும் விலாசத்திற் பெறலாம். ஒவ்வொன்றும் ச-அணுவாகும்.

உள்ளூர்ச் செய்தி.

சென்னை உண்டியல் வட்டம் ο—அ—ο
இரங்கூன் உண்டியல்வட்டம் க—அ—ο

திருநாவுக்கரசர் திருநாள்.

திருப்பத்திமூவர் மடத்தார் வழக்கம்போல் இந்தத் திருநாளைக் கொண்டாடினார்கள்.

காரைச்சிவனடியார் திருக்கூட்டத்தார் இத் திருநாளைவிசேஷமாகவும் உபயோககரமாகவும் கொண்டாடினார்கள். இத்திருக்கூட்டத்தார் இத்திருநாளை முன்னிட்டுச் சிவன்கோவிலில் மூன்று நாட்கள் மாலையிலும், அப்பர்சுவாமிகளின் சரித்திரத்தை உபந்யசித்தார்கள். திருநாளாகிய நேற்றுப்பகலில் சேணியன் ஊருணிக்கரையில்சுமார் எ00 ஏழைகட்கும் சிவன்கோவிலில் பிராமணர்களுக்கும் அன்னமிட்டார்கள்.

சங்கரஜயந்தி உத்ஸவம்.

நிகழும் சித்திரை-மீ உகூ-உ வைசாக சுத்தபஞ்சமிதினத்தன்று ஆதிசங்கராச்சாரிய ஸ்வாமிகளது ஜயந்தி வருகிறது. அத்தினக்கொண்டாட்டம் இவ்வூரில் இரண்டுபிரிவாராற் கொண்டாடப் படுமென்று அவ்வப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன. பக்தகோடிகள் என்று கையொப்பமிட்டவர் ஒரு பிரிவார். அப்படிக் கையொப்பமிடப் பிரியமில்லாமற் பிரிந்து மகா ஜனங்கள் பிர்மவித்தியா விலாசசபை என்று கையொப்பமிட்ட சிலர் ஒரு பிரிவார். இப்பிரிவாரும் எல்லாரிடமும் பணம் வசூல் செய்து வருவதாகத் தெரிகிறது. இவருள் முன்னையவர் ஏகாதசி மடத்தில் சித்திரை உகூ-உ முதல் ரு-நாட்களும், பின்னையவர் முத்துப்பட்டணம் ஸ்ரீ கிருஷ்ணவிலாச மண்டபத்தில் சித்திரை உரு-உ முதல் ஒரு வாரமும் உபந்யாசங்கள் முதலியன நடத்திக் கொண்டாடுவார்கள் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஹிந்துமதாபிமான சங்கம்.

நமது சங்கம் தற்சமயம் இருந்துவரும் கட்டிடத்தை அதன் சொந்தக்காரர்கள் காலி செய்துவிடும்படிகேட்பதால், கல்லுக்கட்டி மேல்கரையினின்றும் மேலவீரப்பனூருணி செல்லும் வழியிலுள்ள ஸ்ரீமாந் சிவ. மெ. லெ. மு. கிருஷ்ணன் செட்டியாரவர்கள் கட்டிடத்திற்கு இம்மாதம் உரு-உ காலை கவ-நாழிகைக்கு மேல் ருஇ-நாழிகைக் குள்ளாகக் குடி புகுவதாக நிச்சயித்திருக்கிறது. அவ்வமயம் சங்கத்தின் உள்ளூர் வெளியூர் அங்கத்தினர்களின் வரவு பெரிதும் எதிர்பார்க்கப் படுகிறது.

சித. சோம. சிதம்பரம்,
காரியதரிசி.

கிராம ஸ்தலஸ்தாபனம்.

ஷ ஸ்தாபனத்தின் கூட்டமொன்று ஏப்ரல்-மீ உகூ-உ புதன் கிழமை மாலை ச-மணிக்குக் கூட்டப்பெற்றது. அங்கத்தினரனைவரும் வந்திருந்தனர்.

க. இவ்வூரை நகர பரிபாலன சபையாக மாற்றவேண்டியது அவசியமில்லையென்றும்,

உ. மெ. செ. வீட்டிற்கு மின்சார விளக்குப் போடுவதற்குத் தெருவில் கல் ஊன்றிக் கம்பிகளைக் கொண்டு போவதற்கு அடுத்த கூட்டத்தில் அனுமதி கொடுப்பதென்றும்,

ந. உ. மெ. மெ. வீதி வடக்குக் கோடியில் காரைக்குடி கம்வாய்க் கால்வாயின் மேல் கட்டப்பட்டிருக்கும் பாலத்தை அகலப்படுத்த வேண்டியதை உத்தேசித்து ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் முன்னரே கட்ட அனுமதிகொடுத்துவிட்டார். கூட்டத்தில் சி. மு. அரு. முத்துராமன் செட்டியாரும் வெ. ராம. லெ. ராமசாமி. செட்டியாரும் இக்கூட்டத்தில் பாலம் அகலப்படுத்த அனுமதிகொடுக்க முடியாதெனவும் பாலம் சட்டுவதற் கேற்படும் செலவுதொகையின் மதிப்புத் தெரிந்த பின்னர்த்தான் தீர்மானிக்க வேண்டுமெனவும் சொல்லிவிட்டனர். ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் செவ்வாய் உத்ஸவத்திற்குள் பாலம் அகலப்படுத்த வேண்டியது அவசியமென்றும், ஆகையால் அகலப்படுத்த இக்கூட்டத்திலேயே அனுமதிக்க வேண்டியது அவசியமென்றும் கூறியபின், வெ. மெ. ராம. சுப்பிரமணியன் செட்டியார், சா. மு. முத்துராமன் செட்டியார் இவர்கள் மேல் பார்வையில் பாலத்தை அகலப் படுத்துவதெனவும்,

ச. மெ மெ. வீதியில் காரைக்குடி கம்வாய்ப் பாலத்தை அடுத்துக் கீழ்ச்சாரில் மரு. சு. சுப்பையாசெட்டியார் வாங்கியிருக்கும் இடத்தில் நூற்றைம்பதே முக்கால் சதுர அடியும் கும பெரி. பழனியப்ப செட்டியார் ஸம்சாரம் நாச்சம்மை ஆச்சி இடத்தில்கஉக-வ சதுர அடியும் ஸ்தாபனத்திற்கு வரிவசூல் தலைவரது மதிப்பின்படி கிரயம் கொடுத்துவாங்கி வீதியை அகலப்படுத்துவதெனவும்

ரு. ககூஉச—உரு-ம் வருஷத்திற்கு இயந்திரவண்டிகள் நிறுத்துமிடத்தில் வரும் வருமானத்தை அடுத்த கூட்டத்தில் ஏலம்போடுவதெனவும்,

சூ. ககூஉச—உரு-ம் வருஷத்தில் இவ்வூரில் செய்யப்பெறவேண்டிய சில்லறை மராமத்துக்களைக் கவனிக்கும் பொருட்டு முரு. லெ. இ. சொக்கலிங்கம் செட்டியார், வெ. ராம. லெ. ராமசாமிசெட்டியார். சி. மு. அரு. முத்துராமன் செட்டியார் இவர்களை ஒருகூட்டத்தாராக நியமித்து, ஸ்தாபன மேஸ்திரி ஒருவர் ஒவ்வொரு பக்கத்து அங்கத்தினரிடமும் சென்று அப்பக்கத்திலுள்ள குறைகளைக் கேட்டு இவர்களிடம் தெரிவிப்பதென்றும், இவர்கட்கு நிவர்த்திக்கப்பெற வேண்டிய தவசியமென்று தோன்றும் குறைகளைக் கூட்டத்திற்குக் கொண்டுவந்து தீர்மானிக்கச் செய்வதெனவும் தீர்மானித்தனர்.

அமைக அமைக.

வேந்தன்பட்டி சோமசுந்தரம் என்பார் "செட்டி செட்டியார்" பற்றி முதலில் ஒருவினாப் பொறித்திருந்தார். உண்மையில் விஷயம் அறியாமையால் கேட்கிறார் என எண்ணி யான் அதற்குப் பதிலிறுத்திருந்தேன். எவரோ எங்கோ எழுதியதைப் பொருளாகக் கொண்டு, தேவலோகத்திலிருந்து குதித்துவந்தவர்போல், ஆராய்ச்சி செய்து முடிவுகட்டிப், பற்பலரால் ஆதரிக்கப்பட்டு அநுட்டானத்திலிருந்துவரும் ஒன்றைப்பற்றி வினவிய இவர் கூற்றுக்கு யான் பதிற் றந்ததே தவறு. இவர் விஷயமறியக் கேட்டாரென எண்ணியே பதிலெழுதினேன். இப்பொழுது அவர் திரும்பவும் ஏதேதோ எழுதியிருக்கிறார். அதனை ஆராயவும் அந்த வீணுக்குப் பதிலெழுதவும் யான் சிறிதும் விரும்பவில்லை. வாசிக்கும் அன்பர்கள் என் கூற்றையும் அவர் கூற்றையும் படித்து உண்மை காண்பாராக! ஆசிரியர் பொருளிலா வம்பர்களின் பித்துரைகட்கு இனி இடந்தாரிருப்பாராக! ஐயா! வேந்தன்பட்டி சோமசுந்தரம்அவர்களே! செட்டி என்று எழுதுவதுதான் வைசிய ஜாதியைக் குறிக்கும் என்ற நுமது கருத்துப்படி, நுமது பிதா, பிதாமகர், பெரியோர் முதலிய யாவரையும் "செட்டி" என்றே குறியும். அது உமதிஷ்டம். என் பெயர் அறிந்து நீர் செய்வதிருக்கட்டும். இத்தகைய வீண் விஷயங்களைப் பத்திரிகையில் எழுதி இடத்தைக் கெடுக்காது அமைக! அமைக!

ஒரு செட்டியார்.

சோமசுந்தரம் என்பாருக்கு பதில்.

"செட்டி எனக் கையெழுத்திடுவதா, செட்டியார் எனக் கையெழுத்திடுவதா," என்னும் பொருள் பற்றி நம் "ஊழியனில்" சில வாரங்களாக வினாக்களும் விடையும் வருவதைக் கண்டேன். வினாவுக்குத் தகுந்த பதில் உரையாது வேந்தன்பட்டி அன்பர் ஒழுங்கன்றியில் பத்திரிகையில் ஏதேதோ பேனாவின் போக்குப்படி விட்டுவிட்டார். முன் பதில் தந்த செட்டியார் யான் அல்லனாயினும் அன்பர் கூற்றுக்கு விடை பகர யானும் கடப்பாடுடையேன். நிற்க.

செட்டி என்றாலும் செட்டியார் என்றாலும் ஒரே ஜாதியைக் குறிக்குமாயினும் முன்னையதைக்காட்டிலும் பின்னையது கௌரவமாக விருக்கிறதல்லவா? உதாரணமாக முதலியார் ரெட்டியார் என்ற வகுப்பார் தாம் கைச்சாத்திடுபவைகளில் முதலியார் என்றும் ரெட்டியாரென்றும் முறையே கையெழுத்திடுகிறார்களல்லரா? அவர்கள் அப்படிக் கைச்சாத்திடுவதின் பொருளென்னை? ஆர் என்பதை மரியாதை விகுதியாக எடுத்தாளுகின்றார்கள் என்பதைக் காட்டுகின்றதன்றோ? வேறு ஜாதிக்குப்போவானேன்? நம் ஜாதியிலும் சிலர் சிறுவர்களுக்கு (சிறுவர்கள் என்ற மட்டில் வயதில் சிறியவர்களுக்கா அறிவில் அல்லது பொருட்செல்வத்தில்—பலத்தில்—பருமனில் சிறியவர்களுக்கா என்று வாதம்புரிய நினையாது விஷயத்தில் கருத்தைச் செலுத்துக.) எழுதும் லிகிதத்தின் மேலுறையில் செட்டிக்கு என்று எழுதுகிறார்கள். விலாசதாரை மரியாதையோடு எழுதுவரான் புகுவோர் செட்டியார் என்று எழுதுவது இயற்கை. எது கருதி ஆர் விகுதி சேர்க்கிறார்கள்? மரியாதை கொடுப்பான் கருதியே யன்றோ; ஆர் என்ற விகுதி சிறப்புக்குரிய அறிகுறியாவென இலக்கணத்தில் இருக்கிறதா இல்லையாவென்று ஆராயவேண்டிய அவசியமில்லை.

தவிரவும் அவன் என்பதற்கும் அவர் என்பதற்கும் பொருளில் என்ன வித்தியாசம்? ஒன்றற்கொன்று சிறப்பைக் காட்டுகின்றதன்றோ. "ன்" என்னும் இறுதியெழுத்து "ர்" என்றுமானால் சிறப்புறுகிறது(உ-ம்) வந்தான்—வந்தார், வேதியன்—வேதியர், ஆசிரியன்—ஆசிரியர், என்பவற்றைக்கவனிக்க. முன்னையவைகளைவிட பின்னையவைகள் உலக வழக்கில் பெருமையுடையவெனத் தெரிகின்றன.

லோகோபகாரியின் ஆசிரியர் அறிவாளரா அல்லரா என்பதைப் பற்றி யாம் தர்க்கிக்கவேண்டாம். அறிவாளர் என்றே வைத்துக்கொள்வோம். அதற்காக நம் சமூக விஷயம் அவருக்குத் தெற்றெனத் தெரியுமென நினைக்க இயலாது. லண்டனில் ஆங்கிலேயர் ஒருவர் ஓர் பெரிய பிரபல வக்கீல் என்று வைத்துக்கொள்வோம். ஆயினும் அவருக்கு அமாவாசையன்று செய்யும் தர்ப்பணம் பண்ணிவைக்கத் தெரியாதென்று நினைக்கிறேன். அதன்பொருட்டு அவரை மடையரெனக் கருதவும் இடமில்லை. ஏன் அவர் வக்கீல் தொழிலில் அதிகப் பாண்டித்ய முடையவராக இருக்கலாம். ஆனால் இந்துதேச ஆசாரத்திற்கேற்ப தர்ப்பணம் பண்ணிவைக்கத் தெரியா திருக்கலாம். அது போலவே 'லோ' ஆசிரியரும் நம் சமூக சம்பந்தமான விஷயங்கள் அறியாதிருக்கலாம். அதில் செட்டி—செட்டியார் என்ற விஷயமும் ஒன்று.

"கடவுளை நீதிநெறியினின்றும் பிறழ்ந்து அழைத்தால் அவன் நம்மை ஒறுப்பானென்பது திண்ணம்" என்று எழுதியிருக்கிறார். நீதிநெறியினின்று பிறழ்ந்து ஒன்றும் செட்டியார் எழுதவில்லை. முருகன் கடவுள் அவனை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். என்றுதானே எழுதியிருக்கிறார். கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கொள்ளலாமென நூல்கள் கூறுகின்றமையால் முருகனை எப்படிக்கூறினும் பொருந்தும் என்பதை மீண்டும் வற்புறுத்துகிறேன்.

நம் தனவைசிய வாலிபர் மகா நாட்டில் வாலிபர் சங்கத்தாரும் பர்மா நாட்டுக்கோட்டையார் சங்கத்தாரும் செட்டியாரென்று கைச்சாத்திடுவதெனத் தீர்மானம் செய்து எத்தனையோ வருஷங்களாகியும் இவ்வளவு காலம் கழிந்தபின் விழித் தெழுந்தவர்போல் கேட்பது வியப்பினும் வியப்பே! கதர் கட்டவேண்டிய தவசியமாவென்று ஓர் இந்தியர் இதுகாலை கேட்பாரானால் (கேட்பதோடுமில்லாமல் விவாதத்திற்கும் வருவாரானால்) அவரை என்னவென்று நினைப்பது? நாட்டின் பெரும்பாகத்தோர் கதர் உடுத்தியும் பின்னுமவர் அக்கேள்விகேட்டால் கட்டவேண்டுமெனச் சொல்லி அத்துடன் அவரிஷ்டத்துக்கு விடுவது நலம். இரண்டாண்டுகளாகக் கதர்கட்டி வரும் என்னையும் ஒருவர் சீமை வேஷ்டி கட்டச் சொல்கிறார். அவர் அறியாது சொல்லும் வார்த்தைக்கு பொதுஜன அபிப்பிராயம் தெரிந்துதான் கட்டவேண்டுமென்று நான் பத்திரிகைகளுக்கு எழுதியனுப்ப விரும்பவில்லை. அதுவாறே நம் அன்பரும் பன்னூட்களுக்கு முன்னரே அவசியமெனக் கருதிச் செய்யப்பட்ட தீர்மானத்தை அனுஷ்டிக்கக்கடமைப்பட்டவரே. இதில் சந்தேகம் வேண்டியதில்லை.

செட்டியாரின் பெயர் அறிய விரும்புகிறார். விஷயந்தான் குறியார் எழுதினாலென்ன? உண்மைப் பெயர் தெரிந்து ஓர் பெரிய காரியம் முடிக்க விரும்புகிறார்போலும்.

"புதியன புகுதலும் பழயன கழிதலும் வழுவல கால வகையினானே" என்றபடி செட்டியார் என்க் கைச்சாத்திடத்தொல்காப்பியமும் நாலும் இரண்டும் நவில்கின்றனவாவென, இனியும் புத்தகங்களைப் புரட்டிப் பார்க்காது காலத்திற்கேற்ற கோலமாக வாலிப சங்கத்தின் தீர்மானப்படி கைச்சாத்திட வினவெழுப்பிய அன்பருக்கு அறிவிப்பதோடு ஏனைய சகோதரர்களையும் உண்மையை உற்றுநோக்கி வாலிபர்களாகிய நாம் கோனாப்பட்டு மகாநாட்டில் செய்த தீர்மானத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு செட்டியார்,
அமராவதிபுதூர்.

பத்து லெக்ஷம்.

ரூபாய்வரை எந்தத் தொகைக்கும் எந்தச் செல்வானமுள்ள தொகைக்கும் மிகவிரைவில் மிகச்சுலபமாக வட்டி பார்க்கவும் வட்டிச்சிட்டை தயாரிக்கவும் சரிபார்க்கவும் புதியமாதிரியில் வட்டிப் பிரகாசிகை, யென்ற புஸ்தகம் கணித்திருக்கிறது. இதில் நாள் க-முதல் நஉ-வரைக்கும் மாதாரிகளுக்கு முதல் கஉ-ரூபாய் வரை வட்டி வீதம் படி வட்டி—சரிகான் வட்டி தவணை வட்டி பாங்கிவட்டி அசல் ரெட்டிப்புச் சம்பளம் முதலியவைகளையும் எளிதில் பார்த்துக்கொள்ளலாம். கணித நிபுணர்களால் நன்கு பரிசோதிக்கப் பெற்றிருக்கின்றது. கால் பைசாகூட வட்டிவிடாது பிரபல லேவாதேவிக்காரர்களான கனம் அண்ணாமலை செட்டியாரவர்கள், ராவ் பகதூர் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் முதலியதனவைசியப்பிரமுகர்களாலும் இராமநாதபுரம் ஜில்லா கலெக்டரவர்கள் கவர்ன்மெண்டு உயர்ந்த உத்யோகஸ்தர்களாலும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கின்றது. விலை ரூ. க. மூன்று புஸ்தகம் ஆர்டருக்கு பாதிச் செலவுதான் சேர்க்கப்படும்.

நா. கு. லெக்ஷ்மணய்யர்,
வெள்ளையனூருணி, தேவகோட்டை.

விளம்பரம்.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா மகிபாலன்பட்டியிலிருக்கும் ஏ. மு. ப. நடேசஞ்செட்டியாராகிய ஏகப்பசெட்டியார் சகலமான பேர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது யாதெனில் மலாய்ஸ்டேட் ஈப்போவில் பசா. முசு. விலாசமுள்ள கடையில் எனக்கும் எனது குமாரன் (மைனர்) முத்துப்பழனியப்ப செட்டியாருக்கும் பாத்தியம் உள்ள ஆறில் ஒரு பாகத்தை மகிபாலன்பட்டி சி.-சா. சாத்தப்பசெட்டியாருக்கு நாளிது ௧௯௨௪-ஞ மார்ச்-மீ ௧௩-உக்கு ருத்ரோத்காரி-ஞ பங்குனி-மீ ௧-உயில் கிரயம் எழுதி ரிஜிஸ்ட்டர்செய்து கொடுத்திருப்பதால் மேற்படி கடையில் எனக்கும் (மைனர்) முத்துப்பழனியப்ப செட்டியாருக்கும் யாதொரு விதமான பாத்தியமும் பின் துயர்ச்சியு மில்லையென்பதை யிதன் மூலம் தெரிவித்திருக்கிறேன்.

ஏ. மு.ப. நடேசன் செட்டியாராகிய
ஏகப்பசெட்டியார்

விளம்பரம்.

ராமநாதபுரம் ஜில்லா தேவகோட்டை கருப்பஞ் செட்டியார் குமாரர் ஆ. வி. க. மெய்யப்ப செட்டியார் தேவகோட்டை கருதா ஊரணி மேல்கரையிலுள்ள அடியில் கண்ட வீட்டு விஷயமாய் லெட்சுமிபுரம் ந. குள. குழந்தவேலன் செட்டியார் பேரிலும், கண்டனூர் வயி. ராம. நா சோமசுந்தரம் செட்டியார் பேரிலும் மதுரையிலிருக்கும் ராமநாதபுரம் சப்கோர்ட்டில ௧௯௨௩-ஞ அசல் நிம்பர் ௯௨-ல் வியாச்சியம் செய்து மேற்படி நம்பருக்கு ௨௦-௯-௨௪-ல வாயிதா ஏற்பட்டிருக்கிறது. இதுவரை ஷை சோமசுந்தரம் செட்டியார் ஆஜராகாததினல் ௨௦-௯-௧௯௨௪-ல் அவர் ஷை கோர்ட்டில் ஆஜராகி நடவடிக்கைகள் நடத்திக்கொள்ளவேண்டிய தென்பதை இதன் மூலம் தெரிவிக்கலாயிற்று.

சொத்து விபரம்.

கஸ்பா தேவகோட்டையில் மெ. அரு. நா. ராமநாதன்செட்டியார்வீட்டிற்கு வடபுறமும் கருதாவூரணி மேலவீதிக்கு மேல்புறம் கருதாவூரணி மடக்கரைக்கும் காலி இடத்துக்கும் தென்புறமும் தென் வடலோடிய சந்துக்குக் கீழ்புறமுமுள்ள கட்டுக்கோப்பு மனைக்கட்டு கொல்லை வகையரா அடங்கிய கட்டிடம்.

மணிநகரம் மதுரை ௩௭-௭-௧௯௨௪. } என். நடேசய்யர் வாதி வக்கீல்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

"ரக்தாட்சி ஆண்டு"

தனவைசிய ஊழியன் தினசரி.

கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

காரியஸ்தர்,
தனவைசிய ஊழியன் ஆலயம், காரைக்குடி.

திருவாளர் செ. ராம.
வள்ளியப்ப செட்டியாரவர்கள், சொக்கநாதபுரம். (மதகுபட்டி தபால்)

திருவாளர் அ. வெ.
தியாகராஜச் செட்டியாரவர்கள், தேவகோட்டை.

திருவாளர் அ. ப. சொ.
சோமசுந்தரச் செட்டியாரவர்கள், ௧௨ மொகல்தெரு, ரெங்கூன்.

திருவாளர் அ. மு.
காசிவிஸ்வநாதச் செட்டியாரவர்கள், அச மார்கட் வீதி, சிங்கப்பூர்.

திருவாளர் க. மு. நா.
முத்தப்பசெட்டியாரவர்கள், ௧௩௪ பினங்குத்தெரு, பினங்கு.

திருவாளர் பிச.
சுப்பிரமணியச்செட்டியாரவர்கள், ௧௦௨ பெல்பீல்ட்தெரு, ஈப்போ.

திருவாளர் அழ. மெ. சு.
மெய்யப்பசெட்டியாரவர்கள், கடுடு கடற்கரைத்தெரு, கொழும்பு.

திருவாளர் மூ. அழு. மெ. சொ.
மெய்யப்பசெட்டியாரவர்கள், சுள கடற்கரைத்தெரு, கொழும்பு.

காரியஸ்தர், தனவைசிய ஊழியன் ஆலயம்,
காரைக்குடி.

இதனால் சகல கனதனவான்களுக்கு தெரியப்படுத்துவது யாதெனில் எங்களிடம் கனத்த இரும்புத் தகட்டினால் செய்து தயாராயிருக்கும் கெட்டி இரும்புப் பெட்டிகள் சரசமாயும் காலகிரய விலைப்படி கொடுக்கிறோம். ஷை பெட்டிகள் ௧௦௦௦-வருஷத்துக்கு மேல் ஆண்டுவரும் அழியாதபொருள். மிகுந்தபலமுடைய ஆங்கில்கள்வைத்து குப்பை ஆணிகளால் நெருக்கமாய் ரிவிட் செய்யப்பட்டிருக்கிறது. நெருப்பு கன்னங்களவு முதலானதும் கிஞ்சித்தேனும் அணுகமாட்டாது. வர்ணங்கள் விதம் விதமாகயிருக்கும். வேண்டுபவர்கள் அடியில் கண்ட அட்ரசுக்கு யெழுதியனுப்பினால் செய்தனுப்புகிறோம்.

மு. அ. அண்டு அ. நா. அ. இராமசாமி செட்டியார் & கம்பெனி
இரும்புப்பெட்டி உற்பத்திசாலை நெ. 2/70 பிருட்வே மதராஸ்

இராமநாதபுரம்ஜில்லா கண்டனூர் அ. நா. அ. ராமசாமிசெட்டியார் வீட்டிலும், ரெங்கூன் வயி. ராம. அரு. கடையிலும், ஈப்போ அ. நா. அ. கடையிலும் ஆர்டர் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

கொடுமையான கோடைக்காலம் ஆரம்பமாகிவிட்டது.

உங்களுக்கும் "மீனாக்ஷி"

(குளிர்ந்த கோலா கலர் வகைகள்)

புதிய இயந்திரத்தில் தயாராகிவிட்டன

பரிக்ஷியுங்கள்.

சா. லெ. செ. மீனாக்ஷி சோடாவாட்டர் கம்பெனி,

செஞ்சை, காரைக்குடி.

விசேஷ அறிக்கை.

சகலருக்கும் தெரியப்படுத்திக் கொள்வதாவது:—

சென்றஞ சித்திரைமீ வெளியிட்ட அறிக்கையை அநேகர் கண்ணுற்றிருக்கலாம். அதன் சீர்திருத்தம் இப்பொழுதே செய்ய நேரிட்டது. சீர்மையிலிருந்து முழுவதும் புதிதாயும் போதிய சப்ளை செய்யக்கூடியதாயும், மிக உயர்தரமாயும் நீடிய காலமிருக்கக் கூடியதாயுமுள்ள சோடா கலர் வகை தினுசுகள் உற்பத்தி செய்யக்கூடிய வல்லமையுடையனவாயுமுள்ள, இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு மீண்டும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிகப் பரிசுத்தமாயும், சாஸ்திர விதிப்படியும், உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தண்ணீரோ பரிசோதகர்களின் ஆராய்ச்சியின் மேல் பரீக்ஷிக்கப்பட்டு, ஜலசம்பந்த ஜீவரேணுக்களுங் கூட நுழையாவண்ணம் அமைத்துள்ள வடிகருவியால் சுத்தி செய்யப்பட்டு வருகிறது. எவ்வகுப்பாரும் அருந்துமாறு விலையும் மலிவாகச் செய்யப்பட்டிருக்கிறது. கிளப் (Club) களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும், வாசகசாலைகளுக்கும் (Reading rooms) சங்கங்களுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும், ஸ்பெஷல் ரேட்டில் விலை குறைத்துக் கொடுக்கப்படும். ஏஜண்டுகளுக்கும் தகுந்த லாபம் கிடைக்கக்கூடிய ரேட்டுக்குக் கொடுக்கப்படும். ஏஜண்டாக விரும்புவோர்கள் நேரிலாவது தபால் மூலமாவது எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சா. லெ. செ.
மீனாக்ஷிசோடாவாட்டர்கம்பெனி
செஞ்சை.
காரைக்குடி.

குறைந்தவிலை! உயர்ந்த வேலை!! சீக்கிரம் முந்துங்கள்!!!
ஸ்வாமி ரப்பர் ஸ்டாம்புகள் செட் நெ. ௬. விலை ரூ. ௧

தங்களுக்கு இஷ்டமான மேலே கண்டிருக்கும் மூர்த்திகளின் [illegible] களைக் கடிதங்கள், கார்டுகள், கவர்கள், புஸ்தகங்கள் முதலிய எல்லாவற்றிலும் தனித்தனியாகத் தாமே அச்சிட்டுக்கொள்ளலாம். மேற்கண்ட [illegible] ரப்பர் ஸ்டாம்புகளின் விலை ரூ. ௧-௦-௦ இத்துடன் மைபேட், பிரஷ், [illegible] இனமாக அனுப்பப்படும். வி. பி. தபால் சார்ஜ் வேறு.

முக்கிய கவனிப்பு:—௪ அணா தபால் தலை அனுப்புகிறவர்களுக்கு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருவுருவ அழகான கலர்படம் ஒன்று அனுப்பப்படும்.

விலாசம்:—அ. இராஜபிள்ளை அண்டு பிரதர்,
நெ. ௧௧, பஜார் ரோட் [illegible] மதராஸ்.

பெங்களூர்.

விலைசரஸம். உத்திரவாதம்.

நல்ல சாயம்.

அசல் பட்டுப்புடவைகள், சித்தாடைகள் பாவாடைகள் ௭-முழம் முதல் ௧௨-வரை உள்ளது. இதற்கு [illegible] ஆர்டரின்பேரில் சப்ளை செய்வோம். [illegible] காரங்களை தறிவேலை செய்கிறவர்கள். எங்கள் சொந்தத்தறியாகச் [illegible] சம். சாயம் கியாரண்டி. மாதிரிபார்த்து ஆர்டர்களை அட்வான்ஸுடன் [illegible] பார்க்கிறோம். வெளியூர் சில்லரை ஆர்டர்களை வி.பி. செய்வதுடன் பெரிய ஆர்டர்கள் செய்தால் உடனே எங்கள் ஏஜண்டை அனுப்புவோம். [illegible] ஊர்ச் சரக்குகளைப் பெங்களூர்சரக்குப்படி என்று ஏமாற்றுவதை [illegible] தேறுங்கள். விலை உயர்ந்தவை ஆர்டரின்பேரில் தயார் செய்யப்படும்.

குறிப்பு: கலியாணம்முதலிய விசேஷங்களுக்குப் பழக்கமாய் சப்ளை செய்யப்படும்.

தந்தி அட்ரஸ்:—கண்டாங்கி, பெங்களூர்சிட்டி
(Tel:-"Kandangi" Bangalore City) தங்கள் உண்மையுள்ள
(C. K.) சி. கே. உச்சப்பா அண்டு பிரதர்ஸ்
சம்பக லக்ஷிமிஹால், சிக்பேட்டை பெங்களூர் சிட்டி.

விளம்பரம்.

மாதம்ஒன்றுக்குப் பத்தி ௧-க்கு ரூ. ௨௦.
ஷை பத்தி அரைக்கு ரூ. ௰௨.
ஷை கால் பத்திக்கு ரூ. ௯.
ஷை அங்குலம் ஒன்றுக்கு ரூ. ௨.

மூன்று மாதங்கள் விளம்பரஞ் செய்வோர்க்கு மாதம் ஒன்றுக்கு பத்தி ஒன்றுக்கு ரூ. ௧௭-ஆகவும் அரைப்பத்திக்கு ரூ. ௯-ஆகவும், கால்பத்திக்கு ரூ. ௫-ஆகவும் போடப்படும்.

ஆறு மாதங்களும் அதற்கதிகமாகவும் விளம்பரஞ் செய்வோர்க்கு மாதம் ஒன்றுக்கு பத்தி ௧-க்கு ரூ. ௧௫-வீதமும் அரைப் பத்திக்கு ரூ. ௮-வீதமும், கால் பத்திக்கு ரூ. ௪-வீதமும் போடப்படும்.

ஒருபக்கம் விளம்பரஞ் செய்ய ௧-மாதத்திற்கு ரூ. ௫௰.
ஷை ஒரு வாரத்திற்கு ரூ. ௰௫.

காரியஸ்தர்,
"தனவைசிய ஊழியன்" ஆலயம்,
காரைக்குடி.

தனவைசிய ஊழியன்
சந்தா விபரம்.

உள்நாட்டிற்கு வருஷ சந்தா ரூ.	ரு—௦—௦
வெளி நாட்டிற்கு ஷை	சு—௦—௦
தனிப்பிரதி க-க்கு	௦—உ—௦

சாவ. சொக்கலிங்கனுல் காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சியற்றிப்பிரசுரஞ்செய்யப் பெற்றது.

END OF ISSUE